பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை



# விசுவாசமும்
# கிரியைகளில்லாதிருந்தால்
# தன்னிலேதானே
# செத்ததாயிருக்கும்

யாக். 2:17

மாத இதழ்

மலர் 15

ஜுலை 2014

இதழ்: 03



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையால் 2014–ம் வருடத்தின் 7–வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை கிருபையாய் தேவன் நமக்கு தந்திருக்கிறபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம். கடந்த மாதத்தில் நடந்த சபையின் ஆராதனைகள், ஊழியங்கள், விசேஷித்த கூடுகைகள் யாவற்றிலும் தேவ பிரசன்னம் இருந்தபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம். அநேக சகோதர, சகோதரிகள் தனியாகவும் குடும்பமாகவும் விடுமுறைக்கு போய்வர கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தேவ கிருபையால் 2014 – 2016 ஆண்டிற்கான புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது. செயற்குழு உறுப்பினர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். **“எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல: எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது”** (2கொரி. 3:5). பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு பவுல் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட ஊழியக்காரன்: பல தேசங்களில் பல சபைகளை நிறுவியவர். அவருடைய கரத்தினால் தேவன் பெரிய அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்தார். ஆனால் அவர் சொல்கிற வார்த்தை நாங்கள் எங்களாலே தகுதியானவர் அல்ல: எங்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது என்கிறார்.

புதிய செயற்குழுவில் உள்ள எங்களுக்கும் தேவனே எங்களை தகுதி படுத்துகிறவர் என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால் தேவனுக்கு முன்பாக நீதி மான் என்று சொல்ல யாருக்கும் தகுதி கிடையாது. எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோம. 3:23–24). நமது சபையின் பிள்ளைகள் அநேகர் மேல் படிப்பிற்கு ஆயத்தம் பண்ணுகிறார்கள். மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் நம் பிள்ளைகள் மேலானவர்கள் என்றல்ல. ஆனால் எந்த படிப்பு படிக்க வேண்டும் என்று தகுதிபடுத்துகிறவர் நம் தேவன்தான். ஆன படியால் சிலர் சொல்லக்கூடும் இதற்கெல்லாம் எங்கள் பிள்ளைக்கு தகுதியில்லை. மதிப்பெண் இல்லை என்று நினைத்தோம். ஆனால் எப்படி இது கிடைத்தது என்றே தெரியவில்லை என்பார்கள். பிரியமானவர்களே! தேவனை நோக்கிப் பார்க்கும் போது அவர் தகுதியை உண்டாக்குகிறார்.

அது போல் வேலையின் காரியங்களில் எனக்கு படிப்போ அனுபவமோ இல்லை. ஆனால் இது எப்படி ஆனது என்று ஆச்சரிப்படுகிற விதத்தில் தேவனே தகுதிபடுத்துகிறவர். ஏனென்றால் அவரை நோக்கிப் பார்த்த முகங்கள் பிரகாசமடையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை (சங். 34:5). அதுபோல் குடும்ப வாழ்க்கையில்

ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன்; சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே: ஏசா. 45:7

புரட்டு இருதயமுள்ளவர்களே; நீதிக்குத் தூரமானவர்களே; எனக்குச் செவிகொடுங்கள். –ஏசா. 46:12

திருமணம் ஆகி இத்தனை வருடம் ஆகிறதே குழந்தை இல்லையே என்று இருக்கிறவர்களுக்கும் அந்த பாக்கியத்தை தந்து நம்மை தகுதிப்படுத்துகிறவர் தேவன் தான். ஏனென்றால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக். 1:37).

பிரியமானவர்களே! நாம் நம்மைக் குறித்து பெருமையடைய ஒன்றுமில்லை. ஏனென்றால் நம்மை தகுதி படுத்துகிறவர் தேவன்தான். ஊழியத்திற்காய், நல்ல படிப்பிற்காய், உயர்ந்த வேலைக்காய், நல்ல குடும்ப வாழ்க்கைக்காய், பிள்ளை பாக்கியத்திற்காய் நம்மை தகுதி படுத்துகிறவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவன் தான். ஆனபடியால் பவுலை போல நம்மை தாழ்த்தி தேவனை உயர்த்துவோம். அப்போது தேவன் நம்மைப் பார்த்து சொல்கிற சத்தமாகிய **"என் கிருபை உனக்குப் போதும்"** (2கொரி. 12:9) என்ற சத்தத்தைக் கேட்க முடியும். தேவ கிருபை நம் ஒவ்வொருவரோடும் நிலைத்திருப்பதாக: ஆமென்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

**இன்றைய தகவல்**

## சூரிய காந்தப் புயல்

பூமியை நோக்கி வரும் சூரிய காந்தப் புயலால் விமான சேவைகள், ராணுவ ரேடியோ, மொபைல் போன், செயற்கைக் கோள்கள் உள்ளிட்ட ஜி.பி.எஸ் தகவல் தொடப்பு சாதனங்கள் பாதிக்கப்படும் என அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். பல ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனின் மேற்பரப்பில் ஏற்படும் வேதியியல் மாற்றங்களால் கொந்தளிப்பு ஏற்பட்டு சூரியப் புயல் தோன்றும். மூன்று விதங்களில் சூரிய காந்தப் புயல் தோன்றும். முதலில் மின் காந்தத் தூண்டல் கதிர் வீச்சும், இரண்டாவதாக புரோட்டான்கள் நிறைந்த அதிர்வலை கதிர்வீச்சும், மூன்றாவதாக சூரியனின் கரோனா என்னும் மேற்பரப்பில் தோன்றும் பிளாஸ்மா கதிர்வீச்சும் நிகழும். இந்த கதிர்வீச்சுக்கள் பூமியை நோக்கி வந்தாலும் பூமிக்கு எந்தவித பெரிய பாதிப்பும் ஏற்படாது. ஆனால் உலக நாடுகள் அனைத்தும் தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பல செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பியுள்ளன. இந்த செயற்கை கோள்களின் உதவியால் தான் பூமியில் தகவல் மற்றும் தொலைத் தொடர்புகள் இயங்குகின்றன. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் சூரியனின் வலது மேற்புறத்தில் பிளாஸ்மா புயல் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட காந்த அலை கள் பூமியை நோக்கி வருவதை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இந்த அலைகள் செயற்கைக் கோள்களைக் கடந்து வரும்போது அவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என அவர்கள் கூறுகின்றனர். மேலும் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் இந்த அலைகள் பூமியின் எந்த பகுதியை தாக்கும் என்பது தெரியவில்லை என்றும், இந்த புயலுக்கு **"எக்ஸ்"** என்றும் பெயரிடப்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

**– அஹமதி தமிழ் திருச்சபை**





# உண்மையான விசுவாசம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே! எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒரு உண்மையான விசுவாசி எப்படி வாழ வேண்டுமென நம்முடைய சத்திய வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. தன்னை ஒரு நல்ல விசுவாசி என அநேகர் சொல்லிக்கொள்வதை இக்காலத்தில் பார்க்கிறோம். ஆனால் யாக்–2:19–ல் வேதம் கூறுகிறது, **"தேவன் ஒருவன் உண்டென்று விசுவாசிக்கிறாய் அப்படி செய்வது நல்லதுதான் பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன"** என்று. அப்படியென்றால் ஒரு விசுவாசிக்கும் பிசாசுக்கும் அடிப்படையில் எந்த காரியத்தில் வித்தியாசம் காணப்பட வேண்டுமென்றால் அதே யாக்–2:17–ல் கூறுகிறது **"விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்"**. ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. (யாக்–2:26)

**1. நற்கிரியைகளே நம் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது:–** யோப்பா பட்டணத்தில் கிரேக்க பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுியாய் செய்து கொண்டு வந்தாள். ஒரு நாள் அவள் வியாதிப்பட்டு மரித்துப் போனாள். அவளை குளிப்பாட்டி மேல் வீட்டிலே கிடத்தி வைத்தார்கள். (அப்–9:26,27) நடந்தது என்ன தெரியுமா! பேதுரு அந்த ஊரில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவனை அழைத்தனுப்பினார்கள். பேதுரு வந்த போது அநேக விதவைப் பெண்கள் அழுது தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், தானமாய்க் கொடுத்த அநேக வஸ்திரங்களையும் அவனுக்கு காண்பித்தார்கள். அவள் அநேக விதவைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் தேவையான வஸ்திரங்களை செய்து கொடுத்திருந்தாள். இதைப் பார்த்த பேதுருவின் உள்ளம் உடைந்தது. இத்தனை நற்செயல்களை செய்த இந்த சீஷியை ஆண்டவர் நிச்சயமாய் உயிரோடு எழுப்புவார் என்று விசுவாசித்து பிரேதத்தின் புறமாய் திரும்பி "தபீத்தாளே எழுந்திரு" என்றான். அதே விநாடியில் அவள் கண்களைத் திறந்து எழுந்தாள் அல்லேலூயா. அவள் செய்த தரும காரியங்கள் அவளை மரணத்திலிருந்து விடுதலை தந்தது. ஆம் பிரியமானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்ள வேண்டுமென்றால் நற்கிரியைகளை அதிகமாய் செய்கிற விசுவாசிகளாய் நாம் வாழ வேண்டும். இயேசு சொன்னார், **"நீயோ தர்மஞ் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது"** (மத்–6:3) அது போல செய்வோமா? கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**2. நமது நற்கிரியைகளே சமுதாயத்தைச் செழிப்பாக்குகிறது:–** இத்தாலியாப் பட்டாளத்திலே பணி செய்த நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியாப் பட்டணத்திலே இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து

எங்கள் மீட்பருடைய நாமம் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய சேனைகளுடைய கர்த்தர் என்பது. ஏசா. 47:4

ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் (அப்–10:2). இவன் புறஜாதியான மனுஷன் யூதனல்ல. ஆண்டவர் அவனுக்கு தரிசனம் அருளிப் பேதுருவை அழைத்து வரச்சொன்னார். அப்படியே பேதுருவுக்கு ஆண்டவர் தரிசனமாகி புறஜாதியான் என்று பார்க்காதே, தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று சொல்லி புறஜாதிகளுக்காகவும் அவர் இரத்தம் சிந்தினதையும் எல்லா ஜாதிகளுக்கும் இரட்சிப்பு அவர் மூலமாகவே வருகிறது என்பதையும் திருஷ்டாந்தப்படுத்தி பேதுருவை அனுப்பினார். அப்படியே பேதுரு போய் கொர்நேலியுவை சந்தித்து தேவ வசனங்களைக் கூறினான். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பை பெறுவானென்று பேதுரு சொல்லிய போது யாவர் மேலும் பரிசுத்த ஆவி யானவர் இறங்கினார். ஆமென். கொர்நேலியு என்ற புறஜாதியான் ஞானஸ்நானம் பெற்று முதல் புறஜாதிக் கிறிஸ்தவனாக மாறினான். எத்தனை சந்தோஷம். அதனால் தான் நீங்களும் நானும் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். ஒரு மனிதனுடைய நற்செயல் முழுச் சமுதாயத்திற்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வந்தது. இதேபோல் நம்மூலமாக ஆண்டவர் சரித்திரம் படைக்கவேண்டாமா? ஒப்புக்கொடுப்போம். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது"(மத்–5:16). நம் தேசத்திற்கு சுவிசேஷம் சொல்ல வந்த மிஷனெரிகள் முதலாவது பசியாற மக்களுக்கு உணவளித்தார்கள், பள்ளிகள் நிறுவி கல்வியறிவு கொடுத்தார்கள், மருத்துவமனைகளை நிறுவி நோயாளிகளைக் காப்பாற்றினார்கள், மூட நம்பிக்கைகளை அழித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். பிறகுதான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து மக்களை ஆண்டவருக்குள் வழி நடத்தினார்கள். வெறும் பிரசங்கங்கள் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்திவிடாது, நற்கிரியைகளே சமுதாயத்தை உயர்த்தும் தேவ இராஜ்ஜியத்தைக் கட்டும். **"இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினால் அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்."** (அப்–10:38)

**3. நற்கிரியைகளே நமக்கு நித்திய ஜீவனை (பரலோக இராஜ்ஜியத்தை) கொடுக்கிறது:–** பரலோக இராஜ்ஜியத்தில் ஒருவன் பிரவேசிக்க வேண்டுமானால் அடிப்படையாக செய்ய வேண்டிய காரியம் நற்கிரியைகளே. இரட்சிக்கப்பட்டுவிட்டேன், ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன், அந்நிய பாஷை பேசிவிட்டேன் இது போதும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம் என யாரும் பகல் கனவு காணவேண்டாம். மத்–25: 41 முதல் 46 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். "பசியாயிருந்தேன் நீங்கள் எனக்கு போஜனம் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தை தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாமல் இருந்தேன் நீஙகள் எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை, வியாதியுள்ளவனாயும் காவலில்

துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா. 48:22

அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை... மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்" என்று சொல்லி நித்திய ஆக்கினையை (நரகத்தை) அவர்களுக்குக் கொடுத்தார். ஆகவே இனிமேல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். மலைப் பிரசங்கத்திலே ஆண்டவர் குறிப்பிட்டு சொன்ன அனைத்து நற்காரியங்களையும் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். மத்–5 முதல் 7–ஆம் அதிகாரம் வரையுள்ள வசனங்களை தியானியுங்கள். பூமிக்கு உப்பாக, ஒளியாக இருப்போம், நம்மை பகைக்கிறவர்களை நேசித்து, மன்னித்து, உதவிகளையும் நன்மைகளையும் செய்வோம். சகோதரனிடத்தில் ஒப்புரவாகி சமாதானமாயிருப்போம், பிறர் பொருட்களை இச்சியாதிருப்போம், உள்ளதை உள்ளதென்று சொல்வோம், சத்தியத்தைப் பேசுவோம், இரகசியமாய் தானதருமங்களைச் செய்வோம், எப்போதும் கவலைப் படாமல் சந்தோஷமாயிருப்போம். பிறரை குற்றவாளிகளாகத் தீர்க்காதிருப்போம், நல்ல கனிகளை கொடுப்போம். விட்டுக் கொடுப்போம், எல்லோரையம் ஏற்றுக்கொள்வோம்.

இவைகளைச் செய்யும்போதுதான் நாம் நம்மை உண்மையான விசுவாசிகள் என சொல்லிக்கொள்ள முடியும். ஒருவரும் நம்மை அசைக்கமுடியாது. கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து உண்மையான விசுவாசிகளாய் வாழ அருள் புரிவாராக.

**கர்த்தரின் பணியில்**
**அன்புள்ள சகோ. ஸ்டாலின்**

---

## என்னை நானறிவேன்

1. ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.

2. நமது இரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.

3. நுரையீரல் ஒரு நாளைக்கு 23040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.

4. நமது இதயம் ஒரு நாளில் 103689 முறை துடிக்கிறது.

5. உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.

குறிப்பு:– நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்: நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார் (ஆதி. 3:19)

**– அஹமதி தமிழ் திருச்சபை**

# கட்டுகளை அறுக்கும் கர்த்தர்

**"அந்நாளில் நான் உன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அந்நியர் இனி அவனை அடிமை கொள்வதில்லை"** (எரே. 30:8). தேவன் நம்முடைய ஜனங்களாய் நம்மை ஏற்றுக் கொள்வது எவ்வளவு பெரிதான ஆசீர்வாதமாக உள்ளது. முதலாவது தேவன் தம் ஜனங்கள் மீதுள்ள கட்டுகளை அறுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை மீட்டு கானான் தேசத்தைக் கொடுக்கிறார். வல்லமையுள்ள தேவன் இறங்கி வந்து ஓரேப் பர்வதத்தில் மோசேயை சந்தித்தபோது மோசேயிடம் முதலாவது நான் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொள்வேன் என்று வாக்குரைத்தார்.

அதன்படி பஸ்கா ஆட்டுக் குட்டியானது அடிக்கப்பட்ட அந்த இரவில் மாபெரும் இரட்சிப்பைக் கட்டளையிட்டார். புதிய ஏற்பாட்டில் தேவன் நம்மை பாவங்கள், சாபங்கள் ஆகிய கட்டுகளிலிருந்து விடுவிக்க தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை பழுதற்ற ஆட்டுக் குட்டியாக நமக்காக தந்தார். அதன் மூலமாக நம்மெல்லாரையும் தம்முடைய சொந்த ஜனமாக ஏற்றுக் கொண்டார். **"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்"** (யோவா. 1:12). நாம் முதலாவது நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு சொந்த இரட்சகராக இயேசுவை ஏற்றுக் கொள்ளும் போதுதான் நாம் அவர் ஜனங்களாக மாறுகிறோம். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதால் ஒழுங்காக ஆலயத்திற்கு போவதினால் மட்டும் அல்ல இயேசுவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது அவர் நம்மீது உள்ள பாவத்தின் கட்டுகளை சாபத்தின் கட்டுகளை அறுத்து இனி நம்மை ஒருவரும் அடிமை என்று கூறாதபடி நம்மை தம் சொந்த ஜனமாக ஏற்றுக் கொள்கிறார்.

தேவனுக்கு பிரியமானவர்களே! இந்த நல்ல தேவனாகிய இயேசு கிறிஸ்துவை தறித்துக் கொண்டு நம் வாழ்க்கையில் குடும்பத்தில் காணப்படுகின்ற சகல கட்டுகளையும் நீங்கப்பெற்றவர்களாய் வாழும்போது நமக்கு மேன்மை உண்டாகுமே. குடும்பத்தில் சமுதாயத்தில் உயர்ந்த மேன்மை உண்டாகுமே. ஆம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டுகள் அறுக்கப்பட்டு சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஜனங்களாய் இருப்பதுவே மகிழ்ச்சி. ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. முருகேசன்**

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 97224276

தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ; அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி; தன் தேவனைச் சார்ந்து கொள்ளக்கடவன். -ஏசா. 50:10

# கேட்கப்படாத ஜெபங்கள்

1. அக்கிரம சிந்தையுள்ளோரின் ஜெபம் –சங். 66:18
2. அருவருப்புகளைச் செய்கிறவர்களின் ஜெபம் –எசே. 8:15,18
3. இரத்தம் சிந்தும் கைகளையுடையவனின் ஜெபம் –ஏசா. 1:15–16
4. ஏழையின் கூக்குரலுக்கு தன் செவிகளை அடைத்துக் கொள்ளுகிறவனுடைய ஜெபம். – நீதி. 21:13
5. துரோகங்களும் அக்கிரமங்களும் செய்கிறவரின் ஜெபம். –புல. 3:42–44: எரே. 3:20–21: ஏசா. 59:12
6. தகாதவிதமாய் கேட்கும் ஜெபம். யாக். 4:3
7. துன்மார்க்கரின் ஜெபம். –சங். 109:2,7
8. பிரமாணங்களை மீறுகிறவர்களுடைய ஜெபம். –எரே. 11:10–11
9. பகைமை குணமுள்ளோரின் ஜெபம். சங். 18:40–41
10. பாவிகளின் ஜெபம். –யோவா. 9:31
11. பெருமைக்காரனின் ஜெபம். –யோபு. 35:12
12. பொல்லாத கிரியைகளை செய்கிறவர்களின் ஜெபம். –மீகா. 3:4
13. மாயக்காரரின் ஜெபம். –மத். 6:5
14. வீண் வார்த்தைகளை அலப்புகிறவனின் ஜெபம். –மத். 6:7, யோபு. 35:13
15. வேதத்தைக் கேளாதவரின் ஜெபம். –நீதி. 28:9

**கர்த்தரில் சகோதரி**
**பத்மினி வர்க்கீஸ்**

---



# எலுமிச்சை

**குவைத் பாட்டி**

**எலுமிச்சை சாற்றுடன் சிறிது இஞ்சித்துண்டை நறுக்கிப் போட்டு கொதிக்க வைத்து ஆறிய பிறகு தினமும் 2 முறை குடித்தால் இருமல் நின்றுவிடும். சூடான டீயில் அரை எலுமிச்சை பழத்தை பிழிந்து 3 நாட்கள் குடித்தால் தலைவலி வராது. வயிற்றுவலி, பித்தத்தால் ஜீரண உறுப்புகளில் ஏற்படும் குறைபாடுகள், சிறுநீர் தொந்தரவுகள் போன்றவை ஏற்படாமல் காக்கும்.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

என் ஜனங்களே; எனக்குச் செவிகொடுங்கள்: என் ஜாதியாரே; என் வார்த்தைக் கவனியுங்கள்:. –ஏசா. 51:4

## காத்திரு

தேவன் பாதம் காத்திருந்த மரியாள் போல
தேவையான ஒன்றான தேவ சித்தம் நிறைவேற
துதியோடு கூடிய தூய ஜெபத்துடன்
தினமும் காத்திருக்க பழக வேண்டும்

சுய சித்தம் நிறைவேற போராடாமல்
சொந்த எண்ணம் ஈடேற நாடிடாமல்
சிந்தையாவும் கர்த்தருக்கே அர்ப்பணித்து
சாந்தமாக காத்திருந்தால் வெற்றி உண்டு

நம்பிக்கை இழக்காமல் காத்திருந்தால்
நிச்சயமாய் நல்ல பதில் தேடிவரும்
நீடிய பொறுமை ஒன்றே உள்ளத்தை நிரப்பட்டும்
நீங்காத ஜெய வாழ்வு என்றென்றும் தொடரட்டும்

– **ஸ்டாலின்**

## ENGLISH ALPHABET

Always Be Cool. Don't have Ego with Friends & family. Give up Hurting Individuals. Just Keep Loving Mankind. Never Omit Prayers. Quietly Remember God. Speak Truth. Use Valid Words. Xpress Your Zeal.

– **Hanshika Sam**

விலையின்றி விற்கப்பட்டவர்கள்; பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். –ஏசா. 52:3

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
- செல்வி. ஜியோனா செல்வசிங்
- செல்வி. ஷேரன் செல்வராஜ்
- செல்வி. ஜோஸ்பின் அந்தோனிசாமி
- செல்வி. ஹர்ஸிதா வெங்கடேஷ்
- செல்வி. ஜெனிற்றா விசு
- செல்வி. லீனா வில்கின்ஸ்
- செல்வன். ஜோசப் பிரின்ஸ் ஜெகநாதன்
- செல்வன். ஏனோக் மார்க் ஆன்றனி
- செல்வன். டெலின் ஜெர்வின் ஃபிராங்கிளின்
- செல்வன். ஆல்வின் தம்புகுமார்
- செல்வன். சஃப்ரின் திமோத்தி சிவகுமார்
- செல்வன். சதீஸ் ஜெயச்சந்திரன்
- செல்வன். மோனித்ராஜ் வெங்கடேஷ்
- செல்வன். சைமன் ஜெயக்குமார்
- சகோதரி. ரெஜினா ராமமூர்த்தி
- சகோதரி. பெல்வியா ஜெரின்
- சகோதரி. மேகலா ஆஸ்டின்
- சகோதரி. ஏஞ்சலீனா மணிராஜ்
- சகோதரி. ராதா இவாஞ்சலின்
- சகோதரி. பவானி ஆரோக்கியராஜ்
- சகோதரி. விக்டோரியா ஜோசப் ஜாண்
- சகோதரி. ஜெபராணி தர்மர்
- சகோதரி. கிறிஸ்டி டேனியேல்
- சகோதரி. சாந்தி ஜெயசேகர்
- சகோதரி. ஹெப்சிபா சேம் ஆனந்த்
- சகோதரி. பாக்கிய சுந்தரி செல்வம்
- சகோ. ஸ்ரீதர்
- சகோ. ஜோசப் ஜாண்
- சகோ. சத்தியநாதன்
- சகோ. தாமஸ்
- சகோ. தாஸ்செல்வம்
- சகோ. சதீஸ்குமார் எத்திராஜ்
- சகோ. தாஸ்
- சகோ. ஸ்டாலின்
- சகோ. கபிலன் பால் புருஷோத்தமன்
- சகோ. அசோக்குமார்
- சகோ. ஸ்டீபன் ஜெயக்குமார்

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து; அவனவன் தன் தன் வழியிலே போனோம்:
கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். -ஏசா. 53:6

# ஜூலை 2014 ஆலய ஆராதனைகள்



ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 06-07-2014 | சகோ. ஜெயசேகர் | சகோ. ரவிஜாண் பீற்றர் |
| 13-07-2014 | சகோ. விசு | சகோ. ஸ்டாலின் |
| 20-07-2014 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 27-07-2014 | சகோ. ஸ்டாலின் | சகோ. ஐசக்துரை |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 04-07-2014 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. பிரேம்குமார் |
| 11-07-2014 | சகோ. ஜெயசேகர் | சகோ. கிறிஸ்டோபர் |
| 18-07-2014 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25-07-2014 | குடும்ப ஆராதனை | |

சங்கிலி தொடர் ஜெபம்: 03-07-2014 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 10-07-2014 இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை

வாலிபர் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்

பெண்கள் கூடுகை: 5.7.2014. Sis. ஹெப்சி சாம் ஆனந்த் - இல்லம்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. சாமுவேல் ஜாண்சன்
- திருமதி & திரு. பக்தராஜ்
- திருமதி & திரு. ஜோான்ஸ் செல்வசிங்
- திருமதி & திரு. அசோக்குமார்
- திருமதி & திரு. முத்தையா
- திருமதி & திரு. சதீஷ்குமார்
- திருமதி & திரு. ஜெஸ்டின்
- திருமதி & திரு. வர்க்கீஸ்
- திருமதி & திரு. ரிச்சர்ட்சன் டேனியேல்
- திருமதி & திரு. தாஸ் செல்வம்
- திருமதி & திரு. ஃபிரட்ரிக் செல்வராஜ்

உன் சிருஷ்டிகரே உன் நாயகர்: சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; -ஏசா. 54:5

மறக்கமுடியுமா!

# மாமம(பு)னிதர் எலிசபெத் ஃப்ரை
# (1780 – 1845)

சிறைக் கைதிகளின் மத்தியில் ஊழியம் செய்பவர்கள் மீது வீண்பழி சுமத்தி, தண்டிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, சிறைச் சாலையில் காலங்களைக் கழிப்பவர்களை சமூகம் என்றும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் சர்வ வல்ல தேவன் அவர்களை மறப்பதில்லை. இன்று சிறை ஊழியம் பல நாடுகளிலும், அநேக சபைகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் உன்னத ஊழியம். அவைகள் எல்லாவற்றுக்கும் முன்னோடியாய்த் திகழ்வது எலிசபெத் ஃப்ரை ஆரம்பித்த ஊழியம். இங்கிலாந்து நாட்டில் மிகவும் செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்த எலிசபெத் வாலிப பருவத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டார். நார்விக் பட்டணத்தில் தன்னுடைய ஊழியத்தைத் துவக்கினார். ஆரம்பத்தில் நார்விக் நகரின் ஏழை எளியவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுப்பதும், ஏழைக் குழந்தைகளுக்கு ஞாயிறு பாடசாலை நடத்துவதும் அவருடைய ஊழியமாக இருந்தது. இவர் "குவேக்கர்ஸ்" என்னும் சபைப் பிரிவைச் சேர்ந்தவர்.

திருமணமான பின்பு எலிசபெத் ஃப்ரை எஸ்ஸெக்ஸ் என்னும் நக ரில் ஊழியத்தைத் தொடர்ந்தார். சுகவீனர்களைப் பராமரிக்கவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் துவங்கினார். ஆனால் அந்த ஊழியத்தில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது. 19–ம் நூற்றாண்டின் துவக்கத்தில் நியூகேட் என்று அழைக்கப்படும் சிறைச்சாலையில் சீர்கெட்ட நிலைமைகள் இருப்பதாக அறிந்த எலிசபெத் உடனே செயல்பட ஆரம்பித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் மிகச்சிறிய அறை களில் அடைக்கப்பட்டிருந்தனர். எவ்வித சுகாதாரமும் இல்லாமல் அழுக்கிலும், பயங்கர குளிரிலும் அவர்கள் வாடிக் கொண்டிருப்பதைக் கண்டவுடன், எலிசபெத் நகரத்தின் மேலதிகாரிகளைத் தொடர்பு கொண்டார். அதுவரை கைதிகளைப் பற்றிய அக்கறை யாருக்குமே இல்லை. நாளடைவில் எலிசபெத்தின் கோரிக்கைகள் கேட்கப்பட்டது. சிறைச்சாலையின் நிலைமையில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின.

ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் குறித்த நேரத்தில் ஜெபமும், வேத வாசிப்பும் நடத்தப்பட்டது. தையற் கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதுவரை வாழ்வை விரக்தியுடன் கழித்த கைதிகள் தையற் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். அதில் கிடைத்த வருமானம் அவர்களை நேர்மையுடனும், சுய மரியாதையுடனும் நடக்க உதவியது. எலிசபெத் ஃப்ரை செய்த மற்றுமொரு முக்கிய சீர்திருத்தம் உண்டு. அந்த நாட்களில் லண்டன் நகரிலிருந்து கைதிகளைக் கப்பலில் ஏற்றி வெகு தூரத்தில் இருக்கும் ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள சிறைகளுக்குக் கொண்டு போய் விடுவது வழக்கம். அப்படிக் கொண்டு போகும்போது பெண் கைதிகளை அதிகாரிகள் மிகவும் ஈனமாக நடத்தினார்கள்.

நீண்ட கடல் யாத்திரையின்போது கூட கைதிகள் அடிமைகளாகவே வாழ்ந்தனர். இவைகளை அறிந்த எலிசபெத் அரசாங்க அதிகாரிகளிடம் முறையிட ஆரம்பித்தார்.

காத்திருக்கக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். –ஏசா. 55:6

அவருடைய விடாமுயற்சியினால், மேலே கூறப்பட்டட கொடுமைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுத்து நிறுத்தப்பட்டன. நியூகேட்டில் ஆரம்பித்த சிறை சீர்திருத்தங்கள் விரைவில் நாட்டிலுள்ள மற்ற சிறைச்சாலைகளிலும் வலியுறுத்தப்பட்டது. எலிசபெத்தின் கனிந்த இதயத்தைக் கைதிகள் கண்கூடாகக் கண்டனர். ஒவ்வொரு தடவையும் கைதிக் கப்பல்கள் இங்கிலாந்திலிருந்து புறப்படும்போது, எலிசபெத் அங்கு சென்று, எல்லாருக்கும் ஆளுக்கு ஒரு வேதாகமும், கம்பளி உடைகள் பின்னுவதற்கு வேண்டிய நூல்களையும், ஊசிகளையும் கொடுத்து அன்புடன் வழியனுப்பிவிட்டு வருவார். இப்படி ஒன்றிரண்டு தடவைகள் அல்ல, 25 வருடங்களாக ஊழியம் செய்தார். பெண்கள் அதிகமாக வெளியே செல்வதை சமுதாயம் விரும்பாத காலக்கட்டத்தில், எலிசபெத் ஃப்ரையைத் துணிச்சலுடன் செயல்பட வைத்தது. கர்த்தர்மீது அவர் வைத்த அளவற்ற அன்பும், பயனுள்ள சேவையைச் செய்யவேண்டும் என்ற உறுதியும்தான். அவரை அவ்வாறான ஊழியத்திற்கு அழைப்பித்தது. கட்டுண்டவர்களை விடுதலையாக்க வந்த கர்த்தராகிய இயேசுவை காவலில் அடைக்கப்பட்டவர்களுக்கு நாம் அறிவிக்கும்போது, "காவலில் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்" என்று சொல்லி மகிழுவார்.

அகில உலகுக்கு எலிசபெத் ஃப்ரை ஒரு சிறை சீர்திருத்தக்காரர் என்று மட்டுமே தோன்றினாலும், கிறிஸ்தவ வட்டாரத்தில் அவர் சிறைக் கைதிகளின் மிஷனெரி என்றே கருதப்படுகிறார்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

**கொய்யாப் பழம்**

## பழம் சாப்பிடுங்க

முகத்திற்கு பொலிவையும் அழகையும் தருகிறது. முதுமைத் தோற்றத்தைப் போக்கி இளமைத் தோற்றத்தைத் தருகிறது. கல்லீரல், மண்ணீரல் போன்றவற்றில் ஏற்படும் புண்ணை ஆற்றிவிடுகிறது. புகைப்பழக்கம் உடையவர்களின் நுரையீரல் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கொய்யாப் பழத்தை சாப்பிட்டால் நுரையீரல் கோளாறு நீங்கி சுகவாழ்வு பெறலாம். இரத்த குழாய்களில் ஏற்படும் அடைப்பு, ரத்த ஓட்டம் போன்றவற்றை கொய்யாப் பழம் சீர்படுத்துகிறது (5 முதல் 10 சதவீதம் வரை சீர்படுத்தும்). கொய்யாப் பழம் நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. ஜீரணக் கோளா றுகளை குணப்படுத்துகிறது. மது பழக்கமுடையோர் தொடர்ச்சியாக கொய்யாப் பழம் சாப்பிட்டு வந்தால் மது அருந்தும் ஆசை அகன்றுவிடும். அல்சர் நோயை குணப்படுத்துகிறது. கொய்யா இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் இருமல், தொண்டை மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு தருகிறது.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

## ஜூன் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்



1. சேயார் யசூபு, மகேர்–சாலால்–அஷ்–பாஸ் ஏசா. 7:3, 8:3
2. கோரேசு ஏசா. 44:28
3. லட்சத்தெண்பத்தையாயிரம் பேர் ஏசா. 37:36
4. குற்ற நிவாரணபலியாக ஏசா. 53:10
5. அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு ஏசா. 9:6
6. தேவாலயம், பூமியனைத்தும் ஏசா. 6:1, 3
7. ஐயோ, ஐயோ ஏசா. 28:1, 29:15
8. கர்த்தர் என்னை இரட்சிக்க வந்தார் ஏசா. 38:20
9. சொந்தப்பேச்சை ஏசா. 58:13
10. சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, அவர் வசனத்துக்கு நடுங்குகிறவனையே ஏசா. 66:2
11. கர்த்தராகிய யேகோவா ஏசா. 12:2
12. இரட்சிப்பு ஏசா. 26:1
13. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது ஏசா. 19:22
14. செப்னாவின் அதிகாரம் எலியாக்கீமுக்குக் கொடுக்கப்படும் ஏசா. 22:15, 21
15. நான் தான், என்னைத்தவிர ஒருவருமில்லை ஏசா. 47:10




## ஜூன் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. டாஃப்னி ஜெபசிங்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. ஜரின் நிஷா கிரன்
Sis.பிரியா பிரேம்குமார்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. சுபா ஸ்டீபன்
Bro. தர்மர்
Bro. லூர்து சாமி
Bro. ஆல்பர்ட்

Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. சாந்தி
Sis. மரியா குளோரி தாஸ்
Sis. மேரி கலா ஜெயக்குமார்
Sis. ஹெப்சி சாம்
Sis. ஜரின் ஃப்ரீடா சிங்
Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட்
Bro. ஜாண்சன்
Bro. இம்மானுவேல்

துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள். –ஏசா. 57:20



# பதில் சொல்லுங்க

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம்
ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. ----------- சென்றது ------------- முடிந்தது.
2. மாகோர் மீசாபீப் என்று கர்த்தர் யாரை அழைக்கிறார்?
3. யெரியா யார்?
4. எதை கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்?
5. பலகணிகளிலும் அரமனைகளிலும் பிரவேசித்தது எது?
6. ஆகீக்காம் யாருக்கு சகாயமாயிருந்தான்?
7. எருசலேம் பிடிப்பட்டபோது எரேமியா எங்கே இருந்தான்?
8. தீக்காற்று எதற்கு நேராக அடிக்கும்?
9. நெட்டையாய் நிற்பது எது?
10. மிஸ்பாவிலிருந்து சிறைப்பிடித்து கொண்டுபோன ஜனம் யாரிடம் வந்து விட்டார்கள்?
11. எதற்கு சங்காரப் பள்ளத்தாக்கு என்று சொல்லப்படும்?
12. வைரத்தின் நுனியினால் எழுதப்பட்டது என்ன?
13. ---------------------என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்?
14. அசரியாவின் தகப்பன் யார்?
15. எவர்களை சேவித்தால் அப்பொழுது பிழைப்பீர்கள்?

குறிப்பு:_ வேதாகமத்தில் எரேமியாவின் புத்தகத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 18-07-2014 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

## சிரி.... சிந்தி

**மனிதன் மகிழ்ந்திருக்கும் போது பாடலின் இசையை ரசிக்கிறான். சோகமாகும் போது பாடலின் வார்த்தையை புரிந்து கொள்ள முயற்சிக்கிறான்.**

**– அஹமதி தமிழ் திருச்சபை**

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் – போன்: 50659288

# இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு தொடர்புடையதும் ஒரே நாளில் நிறைவேறின தீர்க்கதரிசனங்களும்

1. காட்டிக் கொடுக்கப்படுவார் (சங். 41:9) – நிறைவேறினது: மத். 10:4, 26:49,50
2. முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்படுவார் (சக. 11:12,13) – நிறைவேறினது: மத். 26:15
3. அந்த காசு தேவாலயத்தில் எறியப்படும் (சக. 11:13) – நிறைவேறினது: மத். 27:5
4. அந்த காசினால் குயவன் நிலத்தை வாங்குவர் (சக. 11:13) – நிறைவேறினது: மத். 27:7
5. சீடர்களால் கைவிடப்படுவார் (சக. 13:7) – நிறைவேறினது: மாற். 14:50
6. பொய் குற்றம் சாட்டப்படுவார் (சங். 35:11) – நிறைவேறினது: மத். 26:59,60
7. குற்றம் சாட்டப்படும்போது மௌனமாக இருப்பார் (ஏசா. 53:7) – நிறைவேறினது: மத். 27:12
8. காயப்படுத்தப்படுவார் (ஏசா. 53:5) – நிறைவேறினது: மத். 27:6
9. அடிக்கப்படுவார், துப்பப்படுவார் (சங். 50:6) – நிறைவேறினது: மத். 26:67
10. கன்னத்தில் அடிக்கப்படுவார் (மீகா. 5:1) – நிறைவேறினது: மாற். 14:65
11. பரிகாசம் பண்ணப்படுவார் (சங். 22:7,8) – நிறைவேறினது: மத். 27:31
12. மிகவும் தள்ளாடுவார் (சங். 109:24,25) – நிறைவேறினது: யோவா. 19:17, லூக். 23:26
13. கரங்கள் துளைக்கப்படும் (சங். 22:16, சக. 12:10) – நிறைவேறினது: லூக். 23:33
14. அக்கிரமக்காரருடன் தீர்ப்பிடப்படுவார் (ஏசா. 53:12) – நிறைவேறினது: மத். 27:36
15. அக்கிரமக்காரருக்காகவும் வேண்டுதல் செய்வார் (ஏசா. 53:12) – நிறைவேறினது: லூக். 23:34
16. சொந்த மக்களால் கைவிடப்படுவார் (ஏசா. 53:3) – நிறைவேறினது: யோவா. 7:5,48
17. காரணமின்றி பகைக்கப்படுவார் (சங். 69:4) – நிறைவேறினது: யோவா. 15:25
18. நண்பர் தூரமாவார் (சங். 38:11) – நிறைவேறினது: லூக். 23:49
19. மக்கள் தலைகளை துலுக்குவர் (சங். 109:25) – நிறைவேறினது: மத். 27:39
20. அவர்கள் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பர் (சங். 22:17) – நிறைவேறினது: லூக். 23:35
21. உடைக்காக சீட்டிடுவர் (சங். 22:18) – நிறைவேறினது: யோவா. 19:23,24
22. தாகமாயிருப்பார் (சங். 69:21) – நிறைவேறினது: யோவா. 19:28
23. காடியைக் குடிக்கக் கொடுப்பர் (சங். 69:21) – நிறைவேறினது: மத். 27:34
24. அவரது கதறல் கேட்கப்படவில்லை (சங். 22:1) – நிறைவேறினது: மத். 27:46

அவர்கள் நடைகளில் நியாயமில்லை: தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக்கொண்டார்கள் –ஏசா. 59:8

25. பிதாவிடத்தில் தமது ஆவியை ஒப்படைப்பார் (சங். 31:5) – நிறைவேறினது: லூக். 23:46

26. எலும்புகள் முறிக்கப்படாது (சங். 34:20) – நிறைவேறினது: யோவா. 19:33

27. இருதயம் உடைந்தவராவார் (சங். 22:14) – நிறைவேறினது: யோவா. 19:34

28. குத்தப்படுவார் (சக. 12:10) – நிறைவேறினது: யோவா. 19:34

29. அந்தகாரம் தோன்றும் (ஆமோ. 8:9) – நிறைவேறினது: மத். 27:45

30.ஐசுவரியவானாக அடக்கம் பண்ணப்படுவார்(ஏசா. 53:9)– நிறைவேறினது: மத். 27:57

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. கொம்மையன்**

## வாழ்வின் படிகள் 16

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | – | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | – | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | – | பணிவு |
| மிகவும் வேண்டாதது | – | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | – | சமயோஜித புத்தி |
| மிகப்பெரிய கொடியநோய் | – | பேராசை |
| மிகவும் சுலபமானது | – | குற்றம் காணல் |
| மிகவும் கீழ்த்தரமானது | – | பொறாமை |
| நம்பக்கூடாதது | – | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | – | அதிக பேச்சு |
| செய்ய வேண்டியது | – | உதவி |
| விலக்க வேண்டியது | – | விவாதம் |
| உயர்வுக்கு வழி | – | உழைப்பு |
| நழுவவிடக் கூடாதது | – | வாய்ப்பு |
| பிரியக்கூடாதது | – | நட்பு |
| மறக்கக்கூடாதது | – | நன்றி |

**– அஹமதி தமிழ் திருச்சபை**

## சபையின் 2014-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**"சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"**

யோவான். **8:32**

உன்னை நித்திய மாட்சிமையாகவும்; தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன். -ஏசா. 60:15

# வாள் (வசனம்) வீச்சு

## காப்பார்

இஸ்ரவேல் புத்திரராகிய சபையின்மேல் கடுங்கோபம் வராதபடிக்கு லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கி, லேவியர் சாட்சியின் வாசஸ்தல-த்தைக் காவல்காப்பார்களாக என்றார் (எண். 1:53).

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்: துன்மார்க்கர் இருளில் மௌனமாவார்கள்: பெலத்தினால் ஒருவரும் மேற்கொள்ளுவதில்லை (1 சாமு. 2:9)

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்ததுபோல, உன் குமாரரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும் (1இராஜா. 8:25)

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியானை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்ததுபோல, உன் குமாரரும் என் நியாயப்பிரமாணத்தில் நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயா-னால், இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும் (2நாளா. 6:16)

ஆசாரியரும் லேவியரில் ஊழியம் செய்கிறவர்களும் தவிர, ஒருவரும் கர்த்-தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டாம்: அவர்களே உட்பிரவேசிப்பார்களாக: அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்: ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய காவலைக் காப்பார்களாக (2நாளா. 23:6)

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்: அவர் உன் ஆத்-துமாவைக் காப்பார் (சங். 121:7)

கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றை-க்குங் காப்பார் (சங். 121:8)

கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார் (நீதி. 3:26)

நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்: பராக்கிரமசாலிகள் ஐசுவரிய-த்தைக் காப்பார்கள் (நீதி. 11:16)

ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக்காப்பார் என்று சொல்லுங்கள் (எரே. 31:10)

இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்: இவர்களே எனக்கு ஆரா-தனை செய்ய என் பீடத்தைக் கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள் (எசே. 44:16)



ஒரு ஊரில்

# கடவுளா! செல்வமா!! வீரமா!!!

ஒரு முதியவரின் வீட்டிற்கு முன்னால் தினசரி இரவு இளைஞர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடுவதை வழக்கமாய் கொண்டிருந்தனர். இது முதியவரின் மனதிற்கு சஞ்சலத்தை கொடுத்து அவரின் சமாதானத்தையும் கெடுத்தது. இளைஞர்களுக்கு முன்னால் முதியவரின் வீரம் விலைபோகுமா! என்ன செய்வது என்று எண்ணி எண்ணி இரவின் தூக்கம் பல நாட்கள் துண்டிக்கப்பட்டது. இறுதியில் ஒரு திட்டத்தை தனக்குள் வகுத்து அதை செயல்படுத்தத் துவங்கினார். வழக்கமான இரவு வேளை, கிரிக்கெட் விளையாட்டு, இளைஞர்களின் உணர்வுகளில் அவ்வப்போது எழும்பும் செவிகளை துளைக்கும் சப்தம். இச்சூழலில் புது மணப்பெண் போல முதியவர் மெல்ல மெல்ல அடிமேல் அடி வைத்து கிரிக்கெட் விளையாடும் இளைஞர்களை சென்றடைந்தார். ஒரு வயது குழந்தைபோல அவரின் வாய் புன்னகையை உதிர்த்துவிட்டு தொடர்ந்தது... ...

**"நான் அரசு ஓய்வு ஊதியம் வாங்குபவன்"**: நீங்களோ எனக்கு பிடித்தமான கிரிக்கெட்டை விளையாடி என் மனதிற்கு மகிழ்ச்சியை ஊட்டுகிறீர்கள். ஆகவே நான் உங்களுக்கு ஒத்தாசை செய்ய விரும்புகிறேன். நீங்கள் தினசரி இங்கு கிரிக்கெட் விளையாடினால் நான் உங்களுக்கு ஒரு வாரத்திற்கு ஐம்பது ரூபாய் தருவேன் என்றார் முதியவர். கரும்பு சாப்பிட காசா! என்ற விதத்தில் வீரமிக்க இளைஞர்களுக்கு இது ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியது. இளைஞர்கள் சந்தோஷமாக இதற்கு ஒப்புக் கொண்டு தினசரி விளையாடினார்கள். ஒரு வாரம் முடிந்ததும் முதியவர் 50 ரூபாய் கொடுத்தார். இரண்டாவது வாரம் எனக்கு திடீர் செலவு வந்துவிட்டதாக கூறி 20 ரூபாய் கொடுத்தார். மூன்றாவது வாரம் ஓய்வூதியம் இன்னும் வரவில்லை எனக்கூறி 10 ரூபாய் கொடுத்தார். நான்காவது வாரம் என்னால் இனி வாரம் 5 ரூபாய்தான் தர இயலும் என்றார் முதியவர். வீரமிக்க இளைஞர்கள் மிகுந்த கோபத்தால் 5 ரூபாய்க்கு எங்களால் இனி இங்கே விளையாட முடியாது என்று சொல்லி அப்பொழுதே அந்த இடத்தை காலி செய்தார்கள். பணம் வீரத்தை விரட்டியது.

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களே! பணத்தால் இந்த உலகில் பல செயல்களை செய்யலாம். ஆனால் அது கடவுளுக்கு முன் செல்லுமா! நில்லுமா! **"அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதை சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியை பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய் போகக்கடவது"** (அப். 8:18–20) என்று தேவ ஊழியக்காரரால் சாபம் உண்டானது. **"அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்"** (சங். 119:72) என்ற வசனத்தின்படி சத்திய வசனமாய் இருக்கிற நம் தேவனே எல்லாவற்றிலும் உயர்ந்தவர் என்பதும் நமக்கு விளங்கிக் கொள்ள முடிகிறதே! தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

**கர்த்தரின் கிருபையில்**
**அ.்.பியா ஆ. தாஸ்**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!


தலைவர்
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

செயலாளர்
சகோ. ஸ்டாலின்
66021072

பொருளாளர்
சகோ. விசு
97686317

பெண்கள் ஐக்கிய தலைவி
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

வாலிப ஐக்கிய தலைவர்
சகோ. அந்புதராஜ்
60692485


# THE BIBLE IS THE ONLY BOOK WHOSE AUTHOR IS ALWAYS PRESENT WHEN ONE READS IT


சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

--------(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait


ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்


Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048



Private Circulation only